# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :28 October 2025*

கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்
முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2

குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்
மெ.பேபி நிஷாந்தினி

பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்
ப.ராம்குமார்

புறநானூற்றில் உயிரியல் செய்திகள்
எம்ஜிராமச்சந்திரன். வெ

புறநானூற்றில் தமிழர் பண்பாடு
திருமதி கா.சுகன்யா,

செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு
இரா.சினேகலதா

திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்
முனைவர் இரா.ஜெய்சங்கர்

திருக்குறளில் மருத்துவச் செய்திகள்
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை
க.நித்தியா

அபிராமி அந்தாதி - ஒரு பார்வை
சா.கஸ்தூரி

வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்
முனைவர் த. சுபஜா

வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை
முனைவர்ப.தனஞ்செயன்

தெய்வங்களும் கோவில்களும்
அ.அறிவுக்கொடி

பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்
க.கார்த்திகா



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வௌவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**பொதிகைமலையின் ஆயண்டிரன்**
**முனைவர் த. முத்துலட்சுமி**

**பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்**
**கி.தமிழரசி**

**பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்**
**ம.கலைச்செல்வன்**

**இலக்கியங்களும் பசிப்பிணியும்**
**முனைவர் ப. மணிகண்டன்**

**அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்**
**முனைவர் அ.புஷ்பா**

**கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்**
**கு.நிவேதா**

**மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு**
**முனைவர் ஈ இசக்கியம்மாள்**

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

**திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.**
**(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)**
**திரு. விசுமாப்போடி சசிகரன்**

**பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி**
**முனைவர் வே.இரவி**

**கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்**
**முனைவர் அ. மதலேன்**

**சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்**
**முனைவர்அ. அமுல்ராஜ்**

**பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**



அட்டைப்படம் உதவி
**இணையம்**

நன்றி



# தமிழ்

# *Social Thoughts of Pambatti Siddhar Songs*

***M. Siva**, Ph.D. Research Scholar, Department of Tamil, National College (Autonomous), Tiruchirappalli — 620 001, Tamil Nadu, India. (Affiliated to Bharathidasan University)ORCiD: https://orcid.org/0009-0007-8243-4265*

***Dr A. Muruganandham**, Associate Professor, Department of Tamil, National College (Autonomous), Tiruchirappalli — 620 001, Tamil Nadu, India. (Affiliated to Bharathidasan University)ORCiD: https://orcid.org/0009-0002-4781-8179*

***Abstract***

*The creators are creating creations aimed at distributing the ideas needed to society. This social vision may begin when man expressed his intention. The movement and speech of every man makes the social movements. The grammatical literature, from Tolkappiyam to the present day, is a social concept. Society is a federation with different characteristics of people's style, clothing, environment and customs. The purpose of this article is to show that the Siddhartha literature, which is not the same as the Tamil language, has expressed the way of social practices and the ways of removing it in the literature. Since the number of Siddhas is not referred to and is identified as eighteen, the study is bounded by only two siddhas, such as the Siddharth Siddhar and the Kaduveli Siddhartha.*

***Keywords: Siddhar's Songs, Pambatti Siddhar, Kaduveli Siddhar, Social Thought, Discipline.***

## பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்

**மு.சிவா** *(Ref.No.24995/Ph.D.K8/Tamil/Part Time (3-4)/August 2019, dt: 29.01.2020), முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, தேசியக் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620 001, தமிழ்நாடு, இந்தியா (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)*

**முனைவர் ஆ.முருகானந்தம்,** *இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, தேசியக் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)*

**ஆய்வுச்சுருக்கம்**

*படைப்பாளிகள் ஒவ்வொருவரும் சமுதாயத்திற்குத் தேவையான கருத்துகளைப் பகிர்ந்தளிப்பதனை நோக்கமாக கொண்டுதான் படைப்புகளை உருவாக்குகின்றனர். இச்சமூக நோக்கு மனிதன் தன் எண்ணத்தினைச் சைகையால் வெளிப்படுத்திய காலத்திலேயே*

தொடங்கிவிட்டது எனலாம். ஒவ்வொரு மனிதனின் அசைவும் பேச்சும் சமூக அசைவுகளை வெளிக்காட்டுவனவாக அமைகின்றன. தொல்காப்பியம் முதல் தற்காலம் வரையிலான இலக்கண இலக்கியங்கள் சமூகக் கருத்துகளை எடுத்துரைப்பனவாக அமைந்துள்ளன. சமுதாயம் என்பது மக்களின் நடை, உடை, சூழ்நிலை, பழக்கவழக்கம் முதலிய மாறுபட்ட தன்மைகளைக் கொண்ட கூட்டமைப்பு ஆகும். தமிழ்மொழியைப் போன்று காலத்தினை அறுதியிட்டு கூற முடியாத சித்தர் இலக்கியங்கள் சமுதாய நடைமுறைச் செயல்களைக் கூர்ந்து நோக்கி, சமுதாயக் குறைகள் என்ன என்பதை எடுத்துரைத்து அதனை நீக்கும் வழிமுறைகளையும் இலக்கியங்களில் கூறியிருப்பதனை வெளிக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். சித்தர்களின் எண்ணிக்கை வரையறுத்துக் குறிப்பிடப்படாமலும், பதினெண் என அடையாளப்படுத்தப்படுவதாலும் ஆய்வுக்கட்டுரை எல்லை கருதி பாம்பாட்டிச் சித்தர் மற்றும் கடுவெளிச் சித்தர் முதலிய இரண்டு சித்தர்களை மட்டும் எல்லையாகக் கொண்டு அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** சித்தர் பாடல்கள், பாம்பாட்டிச் சித்தர், கடுவெளிச்சித்தர், சமுதாயச் சிந்தனை, ஒழுக்கம்.

**முன்னுரை**

தமிழ் இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பனவாகவும் மக்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டுவனவாகவும் அமைந்துள்ளன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ச்சியான இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டு உயர்தனிச் செம்மொழியாய் விளங்குவது தமிழ் மொழி. இம்மொழியில் தோன்றிய இலக்கியங்கள் அகவாழ்வையும் புறவாழ்வையும் பாடல்கள் மூலம் பண்டைய கால வாழ்க்கையினையும் தற்கால வாழ்க்கை நெறிமுறைகளையும் குறிப்பிடுவனவாக அமைந்துள்ளன. அந்நிரலில் மருத்துவம் பற்றி பேசக்கூடிய நூல்கள் என்றால் சித்தர் இலக்கியம்தான் இடம் விரவி நிற்கும், இவ்விலக்கியங்கள் உடல்நோயை மட்டுமன்றி உள்ள நோயைப் போக்கும் மாமருந்தாகவும் இருப்பதனை அதன் பொருண்மைகள் உணர்த்துகின்றன. சித்தர் இலக்கியங்கள் சமூகம் சார்ந்த பிரச்சினைகளை வெளிக்கொணர்வதாகவும், சமூக அவலங்களை எடுத்துரைப்பதாகவும் அமைந்துள்ளது. சமூகத்தில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு சித்தர் பாடல்களால் தீர்வு காணுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**சமுதாயம் விளக்கம்**

படைப்பாளிகள் தம் படைப்புக்களே அவர்கள் காலச் சமுதாயத்தைப் படம்பிடித்துக் காட்டும் காலக்கண்ணாடியாக விளங்குகின்றன. படைப்பாளர் சமுதாயத்தின் அங்கமென்பதை 'ஸ்காட்' என்பாரின் கூற்றும் நிலைநிறுத்தும் எனும் வில்லியம் ஸ்காட்டின் கருத்தினை இளமதி சானகிராமன் 'சித்தர்களும் சமுதாயப் பார்வையும்' என்ற நூலில் பதிவு செய்கிறார் (இளமதி சானகிராமன், சித்தர்களும் சமூகப் பார்வைகளும், ப.89).

படைப்பாளிகள் தாம் வெளிப்படுத்தும் கருத்திற்கு இணங்க நிறைகளைச் சுட்டிக்காட்டுதல், குறைகளைச் சுட்டிக்காட்டுதல் என இரண்டு நிலைகளைக் கையாளுகின்றனர். மற்றொரு கருத்தினர் குறைகளை எடுத்துக்கூறி நிறைகளைப் பெற வைத்தல் முறையில் படைப்புகளைப் படைக்கின்றனர். தமிழ்ச் சான்றோர்களின் படைப்புகளில் காப்பியங்களிலும் புராணங்களிலும் இந்த போக்கானது காணப்படுகிறது. இறுதியாக சொல்லப்பட்ட மூன்றாவது கருத்தினரே சித்தர்களோடு ஒப்பிட்டுக் காணலாம் (இளமதி சானகிராமன், சித்தர்களும் சமூகப் பார்வைகளும், ப.89).

சித்தர்கள் சமுதாயத்தில் காணப்படும் நடைமுறை செயல்பாடுகளைக் கூர்ந்து நோக்கி அதில் காணப்படும் குறைகளையும் அக்குறைகளை நீக்குவதற்கு வேண்டிய வழிமுறைகளையும் கூறுவதால் சித்தர்கள் மூன்றாவது வகைப் படைப்பாளர்கள் எனலாம்.

**சித்தர்களின் சமுதாயச் சிந்தனையின் பிரிவுகள்**

சித்தர்களின் சமுதாயச் சிந்தனைகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. பாடல்களின்வழி வெளிப்படுத்தும் சமுதாயம்.
2. சமுதாயத்திற்குக் கூறும் அறிவுரைகள்

இவற்றில் முதல் பிரிவினை சமூகம், சாதிப்பிரிவுகள், சமயம், சாத்திரம், சடங்குகள், தொழில், மருத்துவம், கல்வி நிலை, இறைவழிபாடு, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் என்ற வரையறைக்குள் அடக்கலாம். சமுதாயத்திற்கு கூறிய அறிவுரைகளை

1. செய்ய வேண்டிய செயல்கள்
2. செய்ய வேண்டாத செயல்கள்

என இரண்டு நிலைகளில் அணுகலாம். செய்ய வேண்டாத செயல்களைச் செய்துவிட்டு தவிக்கும் உயிர்களுக்கும் வாழும் நெறியினை அறிவுரைகளாக இலக்கியங்களில் சித்தர்கள் உரைக்கின்றனர்.

**ஒழுக்கம்**

ஒழுக்கம் என்பது உரிய முறையில் நடந்து கொள்வது ஆகும். தான் அல்லாது தான் சார்ந்து வாழும் குழுவினருடைய பொதுநலன் மற்றும் ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு தனிமனிதன் கடைபிடிக்கும் நெறியே ஒழுக்கமாகும். மற்றவர்களிடமிருந்து நாம் எதை எதிர்பார்க்கிறோமோ, அதன்படி நாமும் கடந்து கொள்வதே ஒழுக்கமாகும். இந்த நிலையில், சித்தர்கள் அவர்களது பாடல்களில் ஒழுக்கம் பற்றியான கருத்துக்களைப் பதிவிட்டுள்ளனர்.

தினப்படியான வேலைகளையும், கடமைகளையும், சீலங்களையும் விட்டுவிடக் கூடாது. எந்த ஞான நிலையை அடையினும் சமுதாய சட்டங்களையும், ஒழுக்கக் கட்டுப்பாடுகளையும் துறந்து விடக்கூடாது என்பதை அடிக்கோடிட்டு அழுத்தம் திருத்தமாக சொல்கிறார். இதற்கு எடுத்துக்காட்டாக, நாலடியாரில்,

**தான்கெடினும் தக்கார்கேடு எண்ணற்க தன்னுடம்பின்**

**ஊன்கெடினும் உண்ணார்கைத்து உண்ணற்க வான்கவிந்த**

**வையமெல்லாம் பெறினும் உரையற்க பொய்யொடு இடைமிடைந்த சொல் (சமண முனிவர்கள், நாலடியார் மூலமும் தெளிவுரையும், ப.75)**

தான் அழிய நேர்ந்தாலும் மேலோரது கெடுதலை நினையாதிருக்க வேண்டும். உண்ணத் தகாதவரிடத்து வாங்கி உண்ணாமல் இருக்க வேண்டும் என்ற ஒழுக்கநெறியை நாலடியார் பாடல்வழி அறியமுடிகிறது.

**சொல்லுகின்றபடி நடப்பதும் நடந்தபடி சொல்வதுமே ஒழுக்கம். அதனைத் தவிர ஒழுக்கம் என்பது தனிப்பட்ட குணம் அல்ல (பெரியார் சிந்தனைகள்)**

என்று பெரியார் ஒழுக்கம் பற்றி விளக்குகிறார்.

**பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**

**தேரினும் அஃதே துணை (பரிமேலழகர் (உரை), திருக்குறள், குறள்.132)**

ஒழுக்கத்தை வருந்தியும் காக்க வேண்டும். பலவற்றையும் ஆராய்ந்து போற்றித் தெளிந்தாலும், அந்த ஒழுக்கமே வாழ்க்கையில் துணையாக விளங்கும் என்ற குறளின்வழி நாம் அறியலாம்.

**நிலையாமை**

நிலையாமை என்பது உலகியல் வாழ்வு நிலை இல்லாதது என்பதைக் குறிக்கும் ஒரு பதம் ஆகும். தான் என்று நினைத்திருக்கின்ற உடம்பும், தனது என்று நினைத்திருக்கின்ற செல்வமும் நிலை இல்லாமையைக் கூறுவதே நிலையாமை ஆகும்.

நிலையாமை பற்றிய கருத்துகள், தொல்காப்பியம், மதுரைக்காஞ்சி, பதினெண்கீழ்க்கணக்கு ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன. இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை போன்ற மூன்று வகையான நிலையாமை பற்றி பழந்தமிழ் நூல்களில் கூறப்பட்டுள்ளன. அந்த வகையில் சித்தர்கள் உலகம், பொருள்கள் என்று எதுவும் நிலையில்லாதது என்பதை பாமர மக்களுக்கும்புரியும்படி அவர்களின் பாடலின்வழியான உணர்த்துகின்றனர்.

***குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே***

***உடம்பொடு உயிரிடை நட்பு (பரிமேலழகர் (உரை), திருக்குறள், குறள்.338)***

உடம்பொடு உயிர்க்கு உள்ள உறவு, தான் இருந்த கூடு தனியே இருக்க, அதை விட்டு வேறிடத்திற்குப் பறவை பறந்தாற் போன்றது என்று திருக்குறளின்வழி திருவள்ளுவர் விளக்குகிறார்.

***களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து***

***ஆவது போலக் கெடும் (பரிமேலழகர் (உரை), திருக்குறள், குறள்.283)***

களவினால் வந்தடையும் செல்வமானது அளவு கடந்து பெருகுவது போலவே, எதிர்பாராமல் எல்லாம் வந்தது போல, விரைந்து ஒழிந்தும் போய்விடும் என்று நிலையாமையின் தன்மை உணர்த்துகிறார்.

***எனவே, அது நிலையானது என்று அதன் மீது பற்றுக் கொண்டிருப்பது அறிவின்மையாகும். அவ்வாறு உடலின் மீது பற்றுக் கொள்ளும் செயல் மானம் கெட்ட செயலாகும். எனவே, ஒப்பற்றவனாக சடாமுடியுடன் நிகழும் சிவபெருமானுடைய திருவடியை மட்டும் எண்ணியிருப்பாயாக என்று பாடியிருக்கிறார் (க.பாரதிஸ்ரீ, மு.மகேஸ்வரி, சித்தர் இலக்கியம், ப.152).***

***செல்வர்யாம் என்று செவ்வுழி எண்ணாத***

***புல்லறிவாளர் பெருஞ்செல்வம் - எல்லில்***

***கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல் தோன்றி***

***மருங்கறக் கெட்டு விடும் (நாலடியார்)***

மிகுந்த செல்வம் பெற்றிருக்கிறோம் என்ற செருக்குற்றவர்கள் வருந்தும்படி செல்வமானது அவர்களை விட்டு நீங்கும் என்று நாலடியாரின் பாடல் விளக்குகிறது.

***நாடுநகர் வீடுமாடு நற்பொருளெல்லாம்***

***நடுவன்வ ரும்பொழுது நாடி வருமோ***

***கூடுபோன பின்பவற்றாற் கொள்பய னென்னோ***

***கூத்தன் பதங்குறித்துநின் றாடாய் பாம்பே (பாம்பாட்டிச் சித்தர்., பா.40)***

நாடு, நகரம், வீடு, செல்வம், இதர பொருட்கள் இவையாவும் நடுவனாகிய இயமன் நம் உயிரைப் பறிக்க வரும் போது, நாம் சேர்த்து வைத்திருந்த எதுவுமே நம்முடன் வராது.

***மாணிக்கமாக மணிமுடி வாகு வலயம்***

***மார்பிற்றொங்கும் பதக்கங்கள் மற்றும் பணிகள்***

***ஆணிபொன்முத் தாரமம்பொன் அத்தக் கடகம்***

***அழிவான பொருளெனநின் றாடாய் பாம்பே (பாம்பாட்டிச் சித்தர், பா.42)***

மாணிக்கத்தால் ஆகிய மணிமுடி, தோள், வலயம், மார்பில் தொங்கும் பதக்கங்கள் மற்றும் வேறு கைகள், து]ய்மையான பொன்னால் ஆகிய முத்துமாலை, கையில் அணியும் பொற்கடகம் ஆகிய இவையனைத்துமே அழியும் பொருள்கள் தான் என்று ஆடு பாம்பே என்று தன் மனப்பாம்பினை ஆட்டுகிக்கின்றார்.

**மாடகூட மாளிகைகள் வண்ண மண்டபம்**

**மதில் சூழ்ந்த அரண்மனை மற்று முள்ளவை**

**கூடவாரா வெற்றவந்தக் கொள்கை யறிந்தோர்**

**குலவாமல் வெறுப்பாரென் றாடாய் பாம்பே (பாம்பாட்டிச் சித்தர், பா.43)**

மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும், வண்ண மண்டபம், மதில் சுற்றிய அரண்மனை மற்றும் செல்வங்கள் எல்லாம் நாம் கூடவே வருவதில்லை என்ற கொள்கையை அறிந்தவர்கள். அப்பொருள்களை விரும்பாமல் அவற்றை வெறுப்பார்கள் என்று பாம்பே ஆடுவாயாக. இக்கருத்தை,

**உடாஅதும் உண்ணாஅதும் தம்முடம்பு செற்றும்**

**கெடாஅத நல்லறமும் செய்யார் - கொடாஅது**

**வைத்தீட்டி னார்இடிப்பார் வான்தோய் மலைநாட**

**உய்த்தீட்டும் தேனீக் கரி (நாலடி.70)**

செல்வம் இருக்கின்ற காலத்திலேயே விரைந்து அறம் செய்ய வேண்டும் என்று இப்பாடல் வலியுறுத்துகிறது.

**மலைபோன்ற செம்பொற்குவை வைத்தி ருப்பவர்**

**மறலிதான் வருகையில் வாரிச் செல்வரோ**

**அலையாமல் அகத்திணை அத்தன்பால் வைத்தோர்**

**அழியாரென் றேநீதுணிந்து நாடாய் பாம்பே (பாம்பாட்டிச் சித்தர், பா.44)**

செம்மையான பொன்னை மலைப் போன்று குவித்து வைத்திருப்பவர்கள் கூற்றுவன் வரும்போது அவற்றை வாரிக் கொண்டு செல்வார்களோடு மனதை அங்கும் இங்கும் அலையவிடாமல் தலைவனாகிய இறைவன் மேல் வைத்திருப்பவர்கள் என்று பாம்பே ஆடுவாயாக.

**பஞ்சணையும் பூவணையும் பாய லும்வெறும்**

**பாழ்ச்சூடு காடதிலே பயன் பெறுமோ**

**மஞ்சள் காமாலை போய்கசுடு நாறு மணங்கள்**

**வருமென்று தெளிந்துநின் றாடாய் பாம்பே (பாம்பாட்டிச் சித்தர், பா.45)**

பஞ்சனையும், பூ வேலைப்பாடு செய்த தலையணையும், பாயும் பாழான சுடுகாட்டில் பயன்படுமோ? மஞ்சளின் மணம் போய் பிணம்சுடும் தீ நாற்றம் தான் வருமென்று தெளிந்து நின்று பாம்பே ஆடுவாயாக.

**முக்கனியுஞ் சர்க்கரையும் மோத கங்களும்**

**முதிர்சுவைப் பண்டங்களும் மொத்தி யுண்டவாய்**

**மிக்கவுயர் போனபின்பு மண்ணை விழுங்க**

**மெய்யாகக் கண்டோமென் றாடாய் பாம்பே (பாம்பாட்டிச் சித்தர், பா.46)**

முக்கனிகள், சர்க்கரை, மோதகம் என மிகுந்த சுவை மிக்க பண்டங்களை முன்பு விரும்பி, உண்ட வாயானது உடலை விட்டு உயிர்போன பின்பு மண்ணை விழுங்குவதை உண்மையாகவே கண்டோம் என்று மனத்திற்குள் இருக்கும் பாம்பே ஆடுவாயாக.

**இயக்குறு திங்கள் இருட்பிழம் பொக்குந்**

**துயக்குறு செல்வத்தை சொல்லவும் வேண்டா(திருமந்திரம், 213)**

உலக வாழ்வில் நல்வழிக்குப் பயன்படுத்தாமல் சேர்த்து வைத்த செல்வத்தை மறுமை வாழ்வுக்கு எடுத்துச் செல்ல முடியாது என்ற கருத்தினை மேற்கண்ட பாடலின்வழி அறியமுடிகிறது.

**கானலைமான் நீரெனவே கண்டு செல்லல்போல்**

**காசினிவாழ் வினைமூடர் கண்டு களிப்பார்**

**மேனிலைகண் டார்கள்வீணாய் வீம்பு பேசிடார்**

**மெய்யன்பதம் நாடுவாரென் றாடாய் பாம்பே (பாம்பாட்டிச் சித்தர், பா.49)**

கானல்நீரை உண்மையான நீர் என்று எண்ணி, மான்கள் அதன் அருகில் சென்று ஏமாறுவது போல் உலகில் வாழும் மக்கள் தம் கண்ணால் காஹம் செல்வங்கள் நிலையானவை என எண்ணி மகிழ்வர். ஆனால், அவை உண்மையிலேயே அழியும் தன்மையுடையவை என்பதை அவர்கள் அறியமாட்டார்கள் என்று பாம்பே ஆடுவாயாக என்று பாம்பாட்டிச் சித்தர் தம் பாடலின்வழி இவ்வுலக வாழ்க்கை நிலையில்லாதது என்பதை வலியுறுத்தியுள்ளார்.

**ஆசை ஒழிப்பு**

ஆசை என்பது மனிதனை பித்தனாக்கும் கருவியாக விளங்கி கொண்டிருக்கின்றன. ஒரு பொருளின் மீது பற்று கொண்டு அதை அடைய விரும்பும் எண்ணமாகும். பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசை உள்ளிட்ட ஆசைகளுக்கெல்லாம் மனிதன் மயங்கி இயற்கையின் நியதியை மீறுகிறான். இதனை மையமாகக் கொண்டு சித்தர்கள் தமது பாடல்களில் ஆசை ஒழிப்பு பற்றிய கருத்துகளைக் கூறுகின்றனர்.

**எண்ணெய்க்குந் தண்ணீர்க்குந் தொந்தம் இல்லா வாறுபோல்**

**எப்போதும் இப்புயி லெய்த வேண்டும்**

**கண்ணுக்குக்கண் ணானவொளி கண்டு கொள்ளவே**

**கட்டறுத்து வாழ்ந்திடநின் றாடாய் பாம்பே (பாம்பாட்டிச் சித்தர், பா.74)**

எண்ணெய்க்கும், தண்ணீருக்கும் தொடர்பு இல்லாதவாறு எப்போதும், இப்புவியில் வாழ வேண்டும். எண்ணெய் தண்ணீருடன் ஒட்டாததைப் போல, நாம் இந்த உலகில் வாழ்ந்தாலும் ஆசைகளில் அமிழ்ந்து போகாமல் நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். கண்ணுக்கு கண்ணான ஒளிப் பார்த்து பாசம் நீங்கி வாழ்க என்று பாம்பே ஆடுவாயாக என்று பாடுகிறார்.

**நற்சிந்தனை**

அன்றாட வாழ்க்கையில் மன நிம்மதியோடு இருக்க வேண்டுமானால், பிறருக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும். பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலே நம்முடைய வாழ்வு உயர்ந்துவிடும். ஆகையால், நற்பண்புகளை வளர்த்து நல்லொழுக்கத்தை பேஹதல் அவசியமாகும். யாவருக்கும் கேடு நினைக்காத சிந்தனையே நற்சிந்தனையாகும்.

**சமயபேதம் பலவான சாதி பேதங்கள்**
**சகத்தேர்க்கே யல்லாதுசற் சாதுக் களுக்கோ**
**சிமயத் லேறனபேர் சித்த மறுமோ**
**சித்தர் தாந்தந்தேர்ந் தாடாய் பாம்பே (பாம்பாட்டிச் சித்தர், பா.99)**

சமய வேற்றுமை மற்றும் சாதி வேற்றுமை உலக மக்ளுக்கே உண்டாகும். நல்ல சாதுக்களுக்கு அவை உண்டாகாது. மலைப் போன்று உயர்ந்த பேரறிவு பெற்றவர்களுக்கு சிந்தனை மாறுவதில்லை. சித்தர்களின் சித்தாந்தத்தை தேர்ந்து ஆடும் பாம்பே.

உலகில் சாதி வேற்றுமைகள் அற்று ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்று பாடுகிறார். பிறப்பு, இறப்பு ஆகியவற்றை அறுத்திட நான் பெரிய மருந்தொன்றும் சொல்கிறேன், கேள். மனத்தின் பூட்டையும், சிந்தனையின் கதவையும் திறக்கும் வகையை அறிந்து நல்லது செய்வாயாக என்று பாம்பாட்டிச் சித்தர் பாடுகின்றார்.

**பிறப்பு**

பிறப்பு என்பது சந்ததியைப் பெற்றெடுக்கும் அல்லது பிறப்பிக்கும் செயல் அல்லது செயல்முறையாகும். பிறப்பின் முக்கியத்துவம் பற்றியும், ஓர் உயிர் பிறக்கிறதென்றால் அதிலுள்ள அறிவியல் தன்மையை சித்தர்களின் பாடல்களில் விளக்கப் பெற்றுள்ளன.

பிறப்பினால் சாதிகள் தோன்றுவதில்லை. உழைப்பதற்காகவே சாதிகள் தோன்றின. கீழான செயல்களைச் செய்பவர்களே இழிந்தவர்கள். தன்னை அறிபவர் உயர்ந்த சாதியர். சாத்திரங்களும் சடங்குகளுமே சாதி உயர்வை வலுப்பெற செய்கின்றன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சித்தர்கள் வேண்டிய போது வேண்டிய இடத்தில் தோன்றுவதால், இவர்களுக்கென்று வரலாற்று முறையில், வாழ்க்கை வரலாறுகள் இன்று

வரையில் எழுதப்பெறவில்லை. சித்தர்கள் சமாதியடைந்த இடங்களே இன்று பொதுமக்கள் பலரும் வழிபடுகின்ற தெய்வத் திருக்கோயில்களாக இலங்குகின்றன (நா.பாலுசாமி, வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 8, பக்.903-905).

மதுரைத் தமிழ்ப் பேரகராதியில் சித்தர் என்பர்கள் சித்தி பெற்றவர்கள், பூரண அருளை அடைந்தோர், அஷ்டமா சித்தியடைந்தோர், அவர்கள் எண்ணிறந்தவர்கள் அவர்களுள்ளே தமிழ்நாட்டிலே விளங்கிய சித்தர்கள் பாம்பாட்டி, அகப்பேய் முதலியோர்களே. பாம்பாட்டி சித்தர் அந்தணர் என்றும், அகப்பேய்ச் சித்தர் வேளாளர் என்றும் கூறுவர். இருவரும் அணிமா சித்திகளைப் பெற்ற பின்னர் அவற்றாற் பயனின்மை கண்டு ஞானநிலை அடைந்தவர் என்றும் குறிப்பிடப்படுகிறது.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியில், யோகத்தின் மூலம் அரிய சக்தியைப் பெற்றவர், மரபு நெறியில் நில்லாதவர், சித்தர் பாடல்களை எளிதாக புரிந்து கொள்ள முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

**கல்வி நிலை**

சாதிய வேறுபாட்டு முறை மக்களின் கல்வி நிலையிலும் இடையூறாக இருந்திருக்கிறது. உயர்ந்த நிலையில் அந்தணர் மற்றும் வசதிமிக்கவர்களே கல்வி கற்று வாழ்ந்திருந்தனர். மற்றவர்கள் அவர்களின் அடிவருடி நின்றனர். இந்நிலையை உணர்ந்த பாம்பாட்டி சித்தர் (பா.14) தன் பாடலின்வழி சாடுகின்றார்.

**பொய்யான கல்வி கற்றுப் பொருண்மயக்கங் கொள்ளாமல்**
**மெய்யான ஞானக்கல்வி விரும்புவாய் கண்மனமே**

என்று பாடலில் கல்மனம் கொண்டவர்களே எனச் சாபமிடுகிறார்.

**நெசவுத் தொழில்**

நெசவுத் தொழில் குறித்து பாம்பாட்டிச் சித்தர்,

**வடக்குங் கிழக்குமாக நூலை யிழப்போம்;**
**மற்றுஞ் சூழலிலே பாவு பூட்டுவோம்;**
**நடக்கும் வழியினிலே யுண்டை சேர்ப்போம்;**
**நடவா வழியினிலே புடவை நெய்வோம்;**

**குடக்குக் கரையினிலே கோலைப் போடுவோம்;**

**கொய்ததை எங்குமே விற்று விடுவோம் (பாம்பாட்டிச் சித்தர், பா.127)**

என்ற பாடலில் எடுத்துரைக்கிறார். அவர் காலத்தில் அரசர் உடுத்தும் பட்டாடைகளும், எளிய மக்கள் உடுத்தும் பருத்தியாடைகளும் நெய்யப்பட்டிருப்பதனை பாடல்கள்வழி தெரிந்து கொள்ளமுடிகிறது. இத்தொழில்கள் போன்று தச்சர்களும், கொல்லர்களும், இடையர்கள், வேட்டையாடுதல், மீன்பிடித்தல், குயவு, துளை போடுதல், வாணிகம் போன்ற தொழில்கள் குறித்து சித்தர்கள் பாடல்கள் பதிவு செய்துள்ளன.

**நம்பிக்கைகள்**

சில அனுபவங்களே 'நம்பிக்கை' ஆகின்றன (இளமதி சானகிராமன், சித்தர்களும் சமூகப் பார்வைகளும், ப.125).

**ஒரு சமயத்தில் பண்பாட்டு மரபினை அறிவிக்க வல்லன அச்சமுதாயத்தின் நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு சமுதாயத்தால் புரக்கப்படுவன (இளமதி சானகிராமன், சித்தர்களும் சமூகப் பார்வைகளும், ப.125)**

என்று கூறுகிறார். மக்களிடம் பிறைநோக்கல், புனித இடங்களுக்குச் சென்றால் பாவம் தொலையும், புனிதநீரால், சுவர்க்கம் நரகம் உண்டு, விதியின் செயல், மந்திர நம்பிக்கை, தருமம் கொடுத்தல், அணங்கு பிடிக்கும், பூசை, பலி, இறப்புகால நம்பிக்கை போன்ற நம்பிக்கைகள் இருந்து வந்துள்ளதனைச் சித்தர்கள் பாடல்கள் மூலம் விளம்புகின்றனர்.

**முடிவுரை**

சமுதாயம் என்பது நெறிமுறைகளையும் மரபுகளையும் பழக்க வழக்கங்களையும் கொண்ட ஓர் அமைப்பு அவ்வமைப்பு அதிகாரமும் ஒருவர் மற்றொருவருக்கு உதவும் இயல்பும் கொண்டதாகக் காணப்படுகிறது. அது மக்கள் இனத்தில் பல்வேறு பிரிவுகளையும், குழுக்களையும் கொண்டு விளங்குகிறது. சித்தர்களின் பாடல்கள்வழிப் புலனாகும் சமுதாயமும் பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களையும் வகுப்பைச் சேர்ந்தவர்களையும் வெளிக்காட்டுகின்றது. அவர்கள் வாழ்ந்த காலத்தில் மக்கள் சாதிய அமைப்பாலும், கல்வி நிலையாலும் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு இருந்ததனை அவர்களின் பாடல்கள்வழி அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் மக்கள் பின்பற்றிய ஒழுக்கம், பழக்க வழக்கங்கள், இறைவழிபாடு, நம்பிக்கை அவர்களின் பொழுதுபோக்கு ஆகியவற்றைப் பற்றிப் பாம்பாட்டிச் சித்தர் மற்றும் கடுவெளிச்சித்தர் பாடல்கள்வழி இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**துணைநூற் பட்டியல்**


அகத்தியலிங்கம், ச., கந்தசாமி, சோ.ந., தமிழிலக்கிய ஆய்வுக்கோவை, தொகுதி 1, அனைத்திந்திய தமிழ் இலக்கியக் கழகம், தஞ்சாவூர், 1989.

ஆச்சார்யா, பி.எஸ்., அகத்தியர் முதல் வாரியார் வரை, சித்தர்கள் அறுபது பேர் வாழ்வும் வாக்கும், நர்மதா பதிப்பகம், சென்னை.

ஆறுமுக தேசிகர், கருவூரார் பலதிரட்டு, குமாரஸ்வாமி முதலியாரது வாணீவிலாஸ் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது, முதற்பதிப்பு, 1890.

இராமநாதபிள்ளை, ப., சிதம்பரனார், அ., திருமூலநாயனார் அருளிச் செய்த திருமந்திரம் மூவாயிரம் (முதற்பகுதி), The South India Saiva Siddhantha Works Publishing Society, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1957.

இராமலிங்கம், மா., நாவல் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1975.

இளமதி சானகிராமன், சித்தர்களும் சமூகப் பார்வையும், குறிஞ்சி பதிப்பகம், புதுச்சேரி, முதற்பதிப்பு, 1990.

இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை.

சந்தியா நடராஜன், மதுரைத் தமிழ்ப் பேரகராதி, சந்தியா பதிப்பகம், சென்னை, 2004.

சமண முனிவர்கள், நாலடியார் மூலமும் தெளிவு பொருள் விளக்கவுரையும், வை.மு.கோபால கிருஷ்ணமாச்சார்யரால் திருத்தங்கள் செய்யப்பட்டது, சென்னை, ஐந்தாம் பதிப்பு,

சரவணமுத்துப்பிள்ளை, வா., பதினெண் சித்தர்கள், பெரிய ஞானக்கோவை, வித்யாரத்நாகர அச்சுக்கூடம், சென்னை, 1927.

சிங்காரவேலு முதலியார், ஆ., அபிதான சிந்தாமணி, சீதை பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2004.

செயக்குமார், க., சித்தர் கையேடு, சி.எம்.எஸ். அச்சியல் பயிலகம், பாளையங்கோட்டை, 1987.

சோமு, மி.ப., சித்தர் இலக்கியம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியீடு, சிதம்பரம்.

ஞானமூர்த்தி, தா.ஏ., இலக்கியத் திறனாய்வு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், முதற்பதிப்பு, 1980.

தெய்வநாயகம், சி.கோ., சித்தர் சிந்தனைகள், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1979,

பாரதிஸ்ரீ, க., மகேஸ்வரி, மு., செந்தில்குமார், வீ., சித்தர் இலக்கியம், பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., சென்னை, மூன்றாம் பதிப்பு, 2022.

பாலுசாமி, நா., வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 8, தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகம், தஞ்சாவூர், மறுபதிப்பு, 1991.

*References*


*Agathiyalingam, S., Kandasamy, S.N., Tamilailakkiya Aaivukkovai, Vol.1, Anaithinthiya Tamil Ilakkiya Kazhagam, Thanjavur, 1989.*

*Acharya, P.S., Agathiyar Muthar Variyaar Varai, Siddharkal Arupathu Per Vazhvum Vakkum, Narmatha Pathippagam, Chennai.*

*Arumuga Desikar, Karuvoorar Palathirattu, Kuramaswamy Mudaliyarathu Vanivilas Achukoodathil Pathippikkapattathu, First Edition, 1890.*

*Ramanathapillai, P., Chidambaranar, A., Thirumoolanayanar Aruli Seitha Thirumanthiram Moovayiram (First Part), The South India Saiva Siddhantha Works Publishing Society, Chennai, Second Edition, 1957.*

*Ramalingam, M., Novel Ilakkiyam, Tamil Puthakalayam, Chennai, Second Edition, 1975.*

*Ilamathi Janakiraman, Siddharkalum Samooga Paarvaiyum, Kurunji Pathippagam, Puducherry, First Edition, 1990.*

*Ilampooranar, Tholkappiyam, Porulathikaram, Saratha Pathippagam, Chennai.*

*Sandhya Natarajan, Madurai Tamizh Peragarathi, Sandhya Pathippagam, Chennai, 2004.*

*Samana Munivargal, Naladiyar Moolamum Thelivu Porul Vilakkavuraiyum, Vai.Mu.Gopala Krishnamaachariyaral Thiruthangal Seiyyappattathu, Chennai, Fifth Edition,*

*Saravanamuthupillai, V., Pathinen Siddharkal, Periya Gnanakovai, Vidhyarathnaagara Accukoodam, Chennai, 1927.*

*Singaravelu Mudaliyar, A., Abithana Sindhamani, Seethai Pathippagam, Chennai, First Edition, 2004.*

*Jayakumar, K., Siddhar Kaiyedu, C.M.S. Acciyal Payilagam, Palayankottai, 1987.*

*Somu, M.P., Siddhar Ilakkiyam, Annamalai University Veliyeedu, Chidambaram.*

*Gnanamoorthy, T.A., Ilakkiya Thiranaivu, Manivasagar Pathippagam, Chidambaram, First Edition, 1980.*

*Deivanayagam, C.G, Siddhar Sinthanaigal, Thanjavur, First Edition, 1979,*

*Bharathisri, K., Maheswari, M., Senthilkumar, V., Siddhar Ilakkiyam, Paavai Printers (P) Ltd., Chennai, Third Edition, 2022.*

*Balusamy, N., Vazhviyar Kalangiyam, Volume 8, Tamil University Acchagam, Thanjavur, Reprint, 1991.*

ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com